பதிவு எண் : M 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை : 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆவணி 26உ (11—9—67) திங்கள் ★ வெளியூர் : ஆவணி 27உ (12—9—67) செவ்வாய் [இதழ் : 74

சிங்கப்பூர் தகவல்கள்:

கிழிந்தது — தி. மு. க. முகமூடியா? முரணான செய்தியா?

அவசரம் வேண்டாம் — விளக்கம் அங்கிருந்தே வருகிறது !

★

" சிங்கப்பூர் தி. மு. க.-வின் முகமூடி கிழிந்தது "

—9—9—67 'நவசக்தி' செய்தித் தலைப்பு.

" தமிழகத்துத் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சிங்கப்பூரின் ஒரு கலாச்சார அமைப்பான தி. மு. கழகம், அரசியல் தொடர்புகளையும் தார்மீக ஊக்குவிப்பினையும் பெற்று வருவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் பற்றி சிங்கப்பூர் அரசு விசாரணை மேற்கொண்டிருக்கிறது.

கடந்த சனிக்கிழமையன்று குற்றச்சாட்டினைத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வி. லிங்கம் அவர்களே கடந்த ஆண்டு அண்ணாதுரை இங்கு வந்தபோது வரவேற்றார் என்பது நினைவுகூரத்தக்கது.

அண்ணாதுரை கலந்துகொண்ட கூட்டத்தில் தானும் சலந்துகொண்டு பேசுகையில், 'என்னுடைய வாழ்க்கையிலேயே அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தை அப்போதுதான் பார்த்தேன்' என, தலைமையமைச்சர் லீ குவான் ஈ கூறியதாகக் குறிப்பிட்டார்.

இங்குள்ள தி. மு. க.-வினர், எந்த வகையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டிருக்கின்றனர் என்பதோ, எவ்வாறு தமிழகத்துத் தி.மு.க.-விடமிருந்து ஒத்துழைப்பைப் பெறுகிறார்கள் என்பதோ,

இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை— தெளிவாகவில்லை !"

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழின் சிங்கப்பூர் சிறப்புச் செய்தியாளர் தகவல் : 11—9—67 இதழில் வெளியாகியிருப்பது.

இந்திப்படங்கள் பற்றி அண்ணா

பத்திரிகைச் செய்திக்கு மறுப்பு

சென்னை, செப். 10—

இந்தித் திரைப் படம் குறித்து அண்ணா அவர்கள் தெரிவித்ததாகச் செய்தித் தாட்களில் வெளியான கருத்து முற்றிலும் தவறானது —மிகைப்படுத்தப்பட்டிருக்கிறது. இது குறித்து அண்ணா அவர்கள் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள்.

"திருச்சியில் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தபோது, இந்தித் திரைப் படங்கள் பற்றி மாணவர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை என் கவனத்துக்குக் கொண்டு வந்தனர் ; நானும் அச்செய்தியைப் பார்த்ததாகச் சொன்னேன். அதைப்பற்றி அதற்கு மேல் நான் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. இது பற்றி மாணவர்களைச் சந்தித்துப் பேச நான் விருப்பம் கொண்டிருக்கிறேன்.

எனவே, இந்திப் படங்களைத் தடை செய்வதை நான் ஆதரிப்பது போன்று செய்தி வெளியாகியிருப்பது முற்றிலும் தவறானதாகும். இது, நான் கொண்டுள்ள எண்ணத்துக்கே மாறானதாகும்"

என்று அண்ணா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

உண்மைக்கதை

காங்கிரசில் சேர மனைவியே விலை பொருள்?

" உங்கள் கட்சிக்கு மாறி வந்துவிடுகிறேன் ; உங்கள் இளம் மனைவியை அதற்காக எனக்குத் தந்துவிடுங்கள் "

என்று சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கோரியதாக உத்தரப் பிரதேச நாளிதழான 'சர்ச்லைட்' செய்தி ஒன்று வெளியிட்டிருக்கிறது.

★

கொலை புரிந்தார்— உணவாகவும் புசித்தார்— ஆனால் குற்றமெனத் தெரியாதாம்!

கல்கத்தா ஆங்கில நாளேடான 'அமிர்தபசார்' 15-ம் நாள் இதழில் பின்வரும் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது :—

ஆப்பிரிக்கர் ஒருவர், தனது தந்தை — மனைவி — மூன்று குழந்தைகள் ஆகியோரைக் கொலை செய்துவிட்டு, அவர்களுடைய மாமிசத்தையும் புசித்திருக்கிறார் !

குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட அவர் சொன்னதாவது :—

" இது ஒரு கிரிமினல் குற்றம் என்று எனக்குத் தெரியாது !"

கேரளத்தில் கடவுளர்களும் பட்டினி!

உணவுத் துறையில் பற்றாக் குறையைப் பெற்றிருக்கும் கேரளத்தில், மக்களைப் போலவே கோயில்களில் உள்ள கடவுளர்களும் பற்றாக் குறையில் 'அவதி'ப்படுகின்றனராம் !

அளவுமுறை மக்களுக்குவெட்டப்பட்டிருப்பது போலவே, கோயில் ஆராதனைகளுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது !

இதனால், கடவுள் சிலைகளுக்குக் காட்டப்படும் நைவேத்தியங்களும் பாதிக்குமேல் குறைக்கப்பட்டுள்ளன !

இந்திப்பட எதிர்ப்பு

மாணவர்கட்கு அமைச்சர் கருணாநிதி அறிவுறுத்தல்

திருச்சி, செப். 10—

"இந்திப் படங்களைத் திரையிடும் அரங்குகள்முன் மறியல் செய்வது தேவையில்லை "

என்று மாணவர்கட்கு அறிவுறுத்தினார் பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி.

இந்தித் திணிப்பை எதிர்க்கும் பொறுப்பை தமிழக அரசிடமே விட்டுவிடுமாறு அமைச்சர் மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

" மாணவர்கள் கூட்டங்களை நடத்தி, இந்தித் திணிப்பை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்றும் அளவோடு இருந்துவிட வேண்டும். அவர்களின் உணர்ச்சியை இப்போதுள்ள அரசு மதித்து நடக்கும் " என்று அவர் மேலும் கூறினார்.

நடிகர் எம். ஆர். இராதா, ஏதோ ஒரு படத்தில் கேட்பார் —தன் தாயாக வருபவரைப் பார்த்து—'ஏன் பெத்தே ? ஏம்மா என்னைப் பெத்தே ?' என்று !

இப்போது காமராசரும் பேசியிருக்கிறாராம் — 'யாரைக் கேட்டுக்கொண்டு வாக்குறுதி கொடுத்தீர்கள்' என்று !

கோயம்புத்தூரில் நடந்த வேலைநிறுத்தத்தைச் சமரசமாகத் தீர்த்துவைத்த முதலமைச்சருக்கு, 'உங்களிடம் பணமில்லையென்றால், மத்திய சர்க்காரிடம் கேட்டாவது தொழிலாளர்களுக்கு வாங்கிக் கொடுங்கள்' என்று கம்யூனிஸ்டுத் தலைவர் ஒருவர் யோசனை கூறியதாகக் காமராசருக்கு எங்கிருந்து செய்தி வந்ததோ தெரியவில்லை—

'சமரசம் செய்யும்போது மத்திய சர்க்காரைக் கேட்டாயா? நீ பெருமை தேடிக் கொள்ள எதையாவது செய்வது ? முடியாவிட்டால் மத்திய சர்க்காரைக் காட்டிவிட்டு ஓடப் பார்ப்பது ?"

என்று—எம். ஆர். இராதா சினிமாவில் கேட்பதுபோல்— பேசியிருக்கிறார் !

வாதத்துக்காக நானும் கேட்கிறேன்—கோசிஜினைக் கேட்டுக்கொண்டா இங்கே உள்ள 'கோவிந்த் சந்த்'களுக்குக் கோட்டா, லைசென்சுகளைக் கொடுக்கிறார் மொரார்ஜி தேசாய் ?

ஜான்சனைப் பார்த்த பின்னரா ஜனங்களுக்கு அந்தத் திட்டம்-இந்தத் தொழிற்சாலை என்று ஆசை காட்டுகிறார் அசோக் மேத்தா ?

டிகாலேயும் வில்சனையும், சாடோவையும் பியர்சனையும் பார்த்துப் பேசிவிட்டு வந்த பின்னரா — 'பிரமாதங்களைச் செய்யப் போகிறோம்' என்று இந்திரா முழங்குகிறார் ?

இலையைப் போட்டுவிட்டு உலையை வைப்பது போல், இங்கே அடிக்கல்லை நாட்டிவிட்டுதானே 'அந்நிய உதவி' கிடைக்குமா என்று 'ஆகாயத்'தை நோக்கிப் பறக்கிறார்கள் ?

என்ன அரசியல் பேசுகிறார் காமராசர் ? அல்லது அவரது பொருளாதாரச் சித்தாந்தம் தான் என்ன ?

இது சிந்திப்பவர்கட்கு மட்டும் !

" துரதிருஷ்டவசமாக (!) இந்த நாடு இன்னும் இந்திக்காரர்களின் ஆக்கிரமிப்புக்கு ஆளாக வில்லை !"

—சி. இராசகோபாலாச்சாரியார்

தமிழக அரசுக்குப் பாராட்டு

காமராசர் வாயால்...

மதுரை, செப். 10—

" மதுவிலக்கை ரத்து செய்ய ஒரு மாநில காங்கிரசு அரசு முடிவு செய்திருக்கிறது; மற்ற மாநில அரசுகள் மதுவிலக்கைத் தளர்த்தியுள்ளன.

" ஆனால் தமிழக அரசு, குடியின் தீமைகளை உணர்ந்து மதுவிலக்கை நீடிக்க விரும்புகிறது ; எனவே தமிழக அரசைப் பாராட்டுகிறேன்."

இவ்வாறு, அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர், இங்கு நடந்த காங்கிரசு ஊழியர் கூட்டத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

தி. மு. க. ஆட்சி மக்களுக்கு எந்த நல்ல காரியம் செய்தாலும் அதனைத் தாம் பாராட்டத் தயார் என்றும், ஆனால் இந்தப் பாராட்டு தி. மு. க. ஆட்சிக்கே தவிர, தி. மு. கழகத்துக்கு அல்ல என்றும் அவர் மேலும் கூறினாராம்.

'கிளர்ச்சிகள் இப்போது வேண்டாம்'

மாணவர் இந்தி எதிர்ப்புக் குழு வேண்டுகோள்

சென்னை, செப். 10—

தமிழ்நாடு மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாட்டை அக்டோபர் திங்கள் இறுதியில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாடு கூடி, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி குறித்து முடிவு எடுக்கும் வரை வேறு எல்லா இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளையும் நிறுத்தி வைக்குமாறு மாணவர் இந்தி ஆதிக்கக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

ரூ. 24,59,814

துயர்துடைப்பு நிதி வசூல்

முதலமைச்சர் அண்ணா, திரட்டி வரும் சென்னை தீவிபத்துத் துயர்துடைப்பு நிதிக்கு செப். 9-ஆம் நாள் வரை ரூ. 24,59,814.63 சேர்ந்துள்ளது.

கவனத்தில் வையுங்கள்— சமயத்தில் உதவும்!



" 'ஆறு மாதத்தில் என்ன செய்தீர்கள்?' என்று நான் கேட்கவில்லை...

" எல்லாக் கட்சிகளும் ஆளும் கட்சியாக இருப்பதால், 50 கோடி மக்களுக்கு வசதி அளிக்கவும் அவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கவும் கல்வி வசதியைப் பெருக்கவும் எல்லாக் கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. இந்த நிலைமையைக் கண்டு மகிழ்கிறோம். நாமும் பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும்."

—தர்மபுரியில் 8-9-67 அன்று நடந்த காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் காமராசர் பேசிய பேச்சின் ஒரு பகுதி

திரிசங்கு சுவர்க்கத்தில் சுப்பிரமணியம்!

பிரச்சினைக்குரியவராகிறார் முன்னாள் உணவு அமைச்சர்!

கால் பந்தாகிறார் கோபியில் தோற்றவர்!

முன்னாள் மததிய அமைச்சர் சி. சுப்பிரமணியம், புதிய பதவி ஏதாவது ஒன்றினைப் பெறுவார்—என்ற பேச்சு, புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் சில நாட்களாக பலமாகப் பேசப்பட்டுவருகிறது.

'தனது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வதற்காகத்தான்—தனிப்பட்ட முறையில்—இந்திராவை கொடைக்கானலில் சந்தித்துப் பேசினார்' என்று முன்னரே உலவும் யூகம் ஒன்று இங்கு நினைவுகூரத்தக்கது.

"விமான—மின்சாரத் தொழில்நுட்ப வளர்ச்சிகளைக் கண்டு ஆராயும் இந்திய அரசின் குழு ஒன்றுக்கு சுப்பிரமணியம் தலைவராக நியமிக்கப்படலாம்" என்று ஒரு செய்தி கூறுகிறது.

ஆனால், 'அவரைத் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராக மாற்ற இருக்கிறோம்; நிர்வாகப் பொறுப்புக்களுக்கு அவரை இழுக்காதீர்' என்று தமிழகக் காங்கிரசுக் கட்சி மேலிடம் மத்திய அரசுக்கு அறிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கு முன்னால், சுப்பிரமணியத்துக்கு, 'இலண்டனில் தூதுவர் பதவி கொடுக்கலாம்' என்று கூறப்பட்டது; ஆனால், அண்மையில் சென்னை வந்த இந்திரா, டி.டி.கே.-யை அழைத்து, 'இலண்டன் போக விருப்பமா' என்று கேட்டிருப்பதன் மூலம், சுப்பிரமணியத்துக்கு இருந்த சந்தர்ப்பம் மறைந்துவிட்டது என்று நம்பலாம்.

டி.டி.கே. சம்மதிக்காவிட்டால், இங்கிலாந்தின் தூதுவர் பதவி, முன்னாள் வர்த்தக அமைச்சர் மனுபாய் ஷாவுக்கு வழங்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

கல்விக் கொள்கையில் டில்லியின் போக்கு!

அறிவாளர் அறுவர் எச்சரிக்கை

புதுடில்லி, செப். 8—

கல்வித் துறையில் கருத்தறிவிக்கக் கூடிய தகுதி வாய்ந்தவர்களைக் கலந்தாலோசிக்காமல், கல்வியறிவு பற்றிய கொள்கைகளை நிர்ணயிப்பதால் ஏற்படவிருக்கும் அபாயம் குறித்து எச்சரிக்கை செய்யும் வகையில், புகழ்பெற்ற கல்வியாளர்கள் ஆறு பேர் கூட்டறிக்கை விடுத்துள்ளனர்.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி, டில்லிப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.டி. தேஷ்முக், டாக்டர் எச். என். குன்ஸ்ரு, திருமதி கமலாதேவி சட்டோபாத்தியாயா, டாக்டர் எம். சி. செதல்வாட், திரு. பி. சிவராவ் ஆகியோர் விடுத்துள்ள அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:—

"வட்டார மொழிகளின் வளர்ச்சியை நாங்கள் வரவேற்கிறோம்; ஆனால் பல்கலைக்கழகக் கட்டத்தில் ஆங்கிலக் கல்வியைப் பலவீனப்படுத்தி அறிவுத்துறையில் இந்தியாவைப் பின்னணியில் தள்ளிவிடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடக்கூடும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

"ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதன் மூலம், அறிவியல்–தொழில் நுட்பத் துறைகளில் நாம் மிகவும் பின்தங்கியவர்களாகிவிடுவோம்.

"பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களைப் பின்தங்கியவர்களாக்கி, உலகின் மற்றப்பகுதிகளிலிருந்து அவர்களை ஒதுக்கி வைத்துவிடக்கூடியதற்கொலைக் கொப்பான ஒரு கொள்கையை அரசு வகுக்காது என நம்புகிறோம்."

நான்கு மொழிச் சுமை!

மைசூர் மாநில அமைச்சரவை, மாணவர்களுக்கு நான்காவது வகுப்பிலிருந்தே கன்னடம், ஆங்கிலம், இந்தி மூன்றையும் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது.

இந்த முடிவின்படி மாநிலத்திலுள்ள தமிழ்ப் பள்ளி மாணவர்கள் தமிழ்—ஆங்கிலம்—கன்னடம்—இந்தி நான்கு மொழிகளையும் கட்டாயமாகக் கற்க வேண்டியிருக்கும்.

ஆங்கிலத்தின் இன்றியமையாமை

கல்வியமைச்சர் வற்புறுத்தல்

மதுரை, செப். 7—

"எல்லாப் பாடங்களிலும் நல்ல தேர்ச்சி பெறுவதற்குத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் நன்கு தெரிந்திருந்தால் போதும்.

"கல்லூரிகளில் எல்லாப்பாடங்களையும் தமிழில் சொல்லித் தர வேண்டும் என்பதுதான் நமது இறுதி நோக்கமாக இருக்க வேண்டும்"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மதுரையில் சௌராஷ்டிரா கலைக் கல்லூரியைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மொழிச் சிக்கல் பற்றி அமைச்சர் மேலும் கூறியதாவது:—

"பாடமொழி மாற்றம் ஏற்பட்ட பிறகும்கூட ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி இருக்க வேண்டும்; அது அனைத்துலக மொழியாகும்.

"ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும், ஆங்கிலச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை உருவாக்கவும் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்; எனவே ஆங்கிலத்தை விட்டுவிட முடியாது."

சலுகை அனுபவிக்கும் 'தியாகி'கள்!

"விடுதலைப் போராட்டத்தில் துன்புற்றவர்களுக்கு அரசு தரும் சலுகைகளை, அதில் பங்கே கொள்ளாத பலர் அனுபவித்து வருகிறார்கள்"

என்று மைசூர் மாநில காங்கிரசுக் குழுவின் தலைவர் நாகப்ப ஆல்வா கூறியிருக்கிறார்.

இதே கருத்தைச் சில நாட்களுக்குமுன் முதலமைச்சர் நிஜலிங்கப்பாவும் கூறியிருந்தது நினைவு கூரத்தக்கது.

திருவண்ணாமலையில் 'தேம்ஸ்' நதிப் பாய்ச்சல்!

[ஆங்கிலம் தெரிந்தவர்—தெரியாதவர் இருவரும் மன்னிப்பார்களாக]

"ஆங்கிலமா? 'ஐ டோண்ட் லைக் இட்' என்று சொல்லும் மொழிப் பிரியர் (அல்லது 'வெறி'யர்)களைப் பார்த்திருக்கிறீர்களா?—போகட்டும்!

"நான் எப்போதும் 'ப்யூர்' தமிழில் பேசுவது வழக்கம்" என்று 'பிரபலம்' செய்யும் பெரியவர்களைத்தான் கண்டதுண்டா?—இருக்கட்டும்!

"அதாவது... அதாவது... அதாவது...வாட் ஈஸ் கால்ட்...இங்கிலீஷில் சொல்வதென்றால்...இது?" என்று, தமிழில் நினைப்பதை ஆங்கிலமே தெரியாதவர்களிடம் புரியவைக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்யும் தமிழர்களைத்தான் சந்தித்ததுண்டா? — அதுவும் இல்லையா?

அப்படியென்றால், வாருங்கள் திருவண்ணாமலைக்கு; 'என்ன, தீபமா?' என்று கேட்கவேண்டாம். தேம்ஸ் நதி—அங்கே பெருக்கெடுத்து ஓடியது! அதைக் காட்டத்தான் அழைக்கிறேன் திருவண்ணாமலைக்கு!

செம்பில் கொண்டுவந்த தீர்த்தத்தைச் சிரசில் தெளித்துக் கொள்வதன் மூலமே கங்கைக்குப் போய் வந்துவிட்டதாக நினைப்பதில்லையா? திருவண்ணாமலையில், 'தேம்ஸ்' நதியின் சிறு துளி, நான்கு நாட்களுக்குமுன் தெரித்து விழுந்தது.

உடனே, 'தேம்ஸ்' நதியே அங்கே பாய்ந்துவிட்டதைப் பார்த்துவிட்டது போன்ற உணர்வு வந்துவிட்டது எனக்கு!

ஏதோ மொழிகளைப் பற்றிச் சூடாக ஆங்காங்கே பேசிக் கொள்கிறார்கள்; சூட்டோடு சூடாக—'பத்தோடு பதினொன்று; அத்தோடு இது ஒன்று' என்று—அனைத்திந்தியத் தலைவர் காமராசரும் ஒரு போடுபோட்டிருக்கிறார் திருவண்ணாமலையில்!

திருவல்லிக்கேணி திலகர்கட்டத்தில் என்றாலும் ஒருபொருத்தம் இருந்திருக்கும்! காமராசருக்கேகூட ஒரு பெருமை கிட்டியிருக்கும்! பாவம்! சென்னை கொடுத்து வைக்கவில்லை—திருவண்ணாமலை, மலையளவு புண்ணியம் செய்திருக்கிறது—அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவரின் ஆங்கிலப் பேச்சினைக் கேட்பதற்கு!

உரையாற்றிக் கொண்டே—தவறு—நீங்களும் நானும் பேசுவதுபோல 'டயலாக்' பேசிக் கொண்டே வந்தார் பாருங்கள்! ஒரு கட்டம்—ஓர் இடம்—சினிமாவில் 'கிளைமாக்ஸ்' போல ஒரு 'சீக்குவன்ஸ்'—விவரிக்கப்பட்டாக வேண்டும்—என்ன நடந்தது தெரியுமா?

விருதுநகர் காமராசர், தேம்ஸ் நதி தீரராக மாறிவிட்டார் போங்கள்!

"**கூட்டு சேர்ந்து மந்திரிசபை அமைத்துள்ள இவர்கள், (இது இல்லை; அதாவது...... இது......இது இல்லை...... அதாவது) Like Minded People இல்லை.** (அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்கள் நமது வேலை! அப்போது அவரது மனத்துக்குள் இருந்ததை இங்கே படிப்பவர் வசதிக்காகப் படம் பிடித்துத் தரப்பட்டுள்ளது!)

இப்படியாகத் திருவண்ணாமலையில் தெரித்து விழுந்திருக்கிறது—தேம்ஸ் நதியின் ஒரு சில துளிகள்!

'அண்ணாமலையான் செய்த புண்ணியம்' என்று அங்கே உள்ள பக்தர்கள் பேசிக் கொள்ளட்டும்!

'ஆங்கிலம் பெற்ற மகத்துவம்' என்று நாமெல்லாம் கருதிக்கொள்வோம்!

காங்கிரசல்லாத ஆட்சி நடக்கும் சில மாநிலங்களில் உள்ள அமைச்சரவைக்கு, ஒத்த மனப்பான்மை இல்லையாம்!

இதைக் கூறவந்த காமராசருக்கு, தமிழில் சரியான வார்த்தை கிடைக்கவில்லை; தத்தளித்துவிட்டார் ஒரு சில நிமிடம்—எப்படி விவரிக்கப் போகிறோமோ — என்று! உடன் ஓடிவந்தது - ஆங்கிலம் அவரது துணைக்கு! அல்லது அவர் நாடினார் - ஆங்கிலத்தின் துணையை! எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்!

அந்த நேரம் வந்ததென்னவோ — Like Minded People என்ற வார்த்தைகள்!

காமராசர் பேசிய ஆங்கிலம் பற்றி அப்புறம் வருவோம்! பேச நேர்ந்த அரசியல் பற்றி இப்போது பார்ப்போம்!

"காங்கிரசு அல்லாத ஆட்சி நடக்கும் மாநில அமைச்சரவைகளில் ஒத்த மனப்பான்மை இல்லை" என்கிறார்! (நல்ல வேளை! முன்னெச்சரிக்கையாக, 'கழகத்துக்குத் தனித்த 'மெஜாரிட்டி'யைக் கொடுத்ததற்குத் தமிழக மக்களுக்குப் பாராட்டு' என்று கூறித் தப்பித்துக்கொண்டிருக்கிறார்!)

உள்ளும் புறமும்

நெல்லிக்காய் மூட்டைகளைப் பார்த்து, 'எப்படி ஒன்றாக இருக்கின்றன பார்த்தாயா?' என்று வீரம் பேச முடியாது; ஏனெனில், அவிழ்த்துவிட்டால் தெரியும் அவலம்!

அதேபோல், 'என்ன இப்படி—எல்லாவற்றையும் ஒரே மாலையில்' என்று கதம்பப் பூக்களைப் பார்த்துக் கண் சுளிக்கவும் கூடாது!

'காங்கிரசு' என்ற பொது ஆபத்தை ஒழிக்கப் புறப்பட்ட ஒரே காரியத்தில், காங்கிரசு அல்லாத அமைச்சரவையில் காணப்படும் 'ஒத்த மனப்பான்மை', ஒரே கட்சி—ஒரே கொள்கையுடைய மத்திய அமைச்சரவையில் இருக்கிறதா என்பதைக் காமராசர், பொது மேடையில்கூட வேண்டாம்—தனியாக இருக்கும் போது இதயப் பரிசோதனை செய்து பார்த்துக்கொள்ளட்டும்!

பாங்கிகள் தேசியவுடைமை
பொதுத் துறையின் வளர்ச்சி
மன்னர்கள் மானியத் தொகை
மதுவிலக்குக் கொள்கை
சிவசேனை
மொழிப் பிரச்சினை
தேசாயின் பொருளாதாரத் திட்டங்கள்

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதில் ஏதாவது ஒன்றிலாவது மத்திய அமைச்சரவையில்—அல்லது அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியில் ஒத்த கருத்துடைய ஒரு பத்துப் பேரை காமராசர் காட்ட முடியுமா?

ஆனால் காமராசர் கேட்கிறார்—காங்கிரசு அல்லாத கூட்டு அமைச்சரவையில 'லைக் மைண்டட் பீப்பிள்' இல்லையே என்று!

பாம்பை அடிக்க வந்த கூட்டத்தினர் எல்லோருமே, ஒத்த கருத்துடையவர்களாகவா இருப்பார்கள்?

திருடனை விரட்டுபவர்கள், ஒரே கொள்கையுடையவர்களாகத்தான் இருக்க வேண்டுமா?

'பாம்பு அடிக்கப்பட வேண்டும்—திருடன் விரட்டப்பட வேண்டும்' என்ற நிலை வந்ததனால்தான் அவர்கள் ஒன்று சேர்ந்தார்கள்!

'காங்கிரசு எப்படியும் அகற்றப்பட்டாக வேண்டும்' என்ற ஒரே அவசர - அவசிய நோக்கத்துக்குத்தான் பல மாநிலங்களில் காங்கிரசு அல்லாத அமைச்சரவை!

இது ஏன் காமராசருக்குப் புரியவில்லை? விளங்கவில்லை?

'ஆங்கிலம் பேசவேண்டும்' என்று ஆசைப்பட்டார் ஒரு கிராமவாசி; அவரது தொந்தரவைப் பொறுக்கமாட்டாமல், "என்ன பெரிய ஆங்கிலம்? எதற்கெடுத்தாலும், 'Yes — No — Very Good' என்று சொல்; அவ்வளவுதான்" என்று 'திடீர்' வழியைச் சொல்லிக்கொடுத்தார் ஒரு குறும்புக்காரர்!

செய்யாத குற்றத்துக்காகப் போலீசுப் பார்வையில் பட நேர்ந்தது—அந்தக் கிராமவாசியின் போதாத வேளை; காவல்நிலையத்தில் நடந்தது இதுதான்:—

"என்ன—நீர்தான் அந்தக் கொலையைச் செய்ததா?"

"எஸ்! (Yes)

"வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறீரா?"

"நோ! (No)"

"அப்படியானால், கைது செய்திருக்கிறோம் உம்மை."

"வெரி குட்! (Very Good)"

திருவண்ணாமலையில் தேம்ஸ் நதித் தீரராக மாறியிருக்கும் காமராசர், இந்த வேடிக்கைக் கதையினைத்தான் நினைவுபடுத்துகிறார்!

அவர் கூறிய Like Minded People வாதம்—கடைசியில் எப்படிப் பார்த்தாலும்—அவரது கட்சியைத்தானே தாக்குகிறது!

'ஆங்கிலம் அகற்றப்பட வேண்டாமா? அப்போதுதான் இந்தி மகத்துவம் பெறும்' என்று அங்கே உள்ள இந்திக்காரர்களுக்காகப் பேசிய காமராசர், திருவண்ணாமலையில் தேம்ஸ் நதிக் கரைக்குப் போயிருக்கிறார்!

அவரது 'லைக் மைண்டட் பீப்பிள்' வாதம், தவறாகப் போனது பற்றிக்கூட நமக்கு வருத்தம் இல்லை; ஒரு சில சொற்களை விளக்க ஆங்கிலத்தைத் தேடிப் போயிருக்கிறாரே—அல்லது அது அவரது துணைக்கு ஓடிவந்திருக்கிறதே என்பதைப் பார்க்கும் போதுதான் ....என்னென்னவோ சொல்லத் தோன்றுகிறது.........எதற்கு அதெல்லாம்!

—எஸ். ஆர்.

வட நாட்டில் இந்திவெறி!

"சில நாட்களுக்கு முன்பு நான் வடநாட்டில் பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஒருமுறை நான் ஜெய்ப்பூர் இரயில் நிலயத்திலிருந்த ஊழியரிடம் சில தகவல்களை ஆங்கிலத்தில் கேட்டேன். அவர் ஆங்கிலத்தில் விடையளிக்கத் தொடங்குமுன் அவருடன் இருந்த அவரது கூட்டாளி, "நம்முடைய 'ராஷ்டிர' பாஷை'யில் விடையளிக்க உரிமையிருக்கும்பொழுது ஆங்கிலத்தில் பேச உனக்கு வெட்கமாக இல்லையா?" என்று கூறி இவரைத் தடுத்து நிறுத்திவிட்டார்.

"அன்று இந்தி தெரிந்த என்னுடைய சகோதரன் இல்லாமலிருந்தால், என் நிலைமை என்னவாகியிருக்குமோ"

என்று பெங்களூரைச் சேர்ந்த யஷ்வந்தகுமார் என்பவர் 'டெக்கான் ஹெரால்டு' இதழில் எழுதியிருக்கிறார்.

இந்தியைத் திணிப்பதால் நாட்டுக்கு ஆபத்து

அமைச்சர் மதியழகன் விளக்கம்

கோவை, செப். 8—

"இந்தியை, இந்தி பேசாத மக்கள்மீது மத்திய அரசு திணிப்பது, நாடு சிதறுண்டு போக வழிவகுத்ததாகும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், அவிநாசிலிங்கம் குடும்பக் கலைக் கல்லூரியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"விஞ்ஞானம், தொழில் நுட்பப் பாடங்கள் கற்க ஆங்கிலம் இன்றியமையாதது. மற்ற மாநிலங்களுடனும், வெளிநாடுகளுடனும் கடிதப் போக்குவரத்துக்கு ஆங்கிலத்தைத் தமிழக அரசு விரும்புகிறது. எனவே, தமிழைப் பாட மொழியாகவும், எல்லா நிலைகளிலும் ஆட்சி மொழியாகவும் ஆக்குவதால் தமிழகத்திலிருந்து ஆங்கிலம் மறைந்துவிடும் என்று அஞ்சத் தேவை இல்லை."

மொழிப் பிணக்கு—குடியரசுத் தலைவரின் கவலை

ஐதராபாத், செப். 7—

"மொழிபற்றி இப்போது நாட்டில் எழுந்துள்ள பிணக்குக்கு உடனே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்களை ஒன்றுபடுத்துவதுதான் மொழியின் நோக்கம்; அதனால், மக்களிடையே வேற்றுமைகள் வளரக்கூடாது"

என்று, குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், ஒரு விழாவில் பேசுகையில் கூறினார்.

இந்திப் பித்தர்களின் பத்தாம்பசலிப் போக்கு

பிராங்க் அந்தோணி எச்சரிக்கை

புதுடில்லி, செப். 9—

"சட்டத் துறையிலும் இந்தி திணிக்கப்படுமானால், நாடு மீண்டும் பத்தாம் பசலி நிலையை அடைந்துவிடும்."

"படிப்படியாக உருவாகி வளர்ந்துள்ள நாட்டின் ஒருமைப்பாட்டை நாசம் செய்வதுடன், நாட்டை அறியாமை இருளிலும் பிற்போக்குத் தனத்திலும் மூழ்கடிக்க இந்தி வெறியர்கள் துணிந்துள்ளனர்"

என்று, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பிராங்க் அந்தோணி எச்சரிக்கை செய்துள்ளார்.

பாவம்—இந்தி!

மது லிமாயிகளின் பதில் என்ன?

புதுடில்லி, செப். 11—

சட்டங்களை மொழிபெயர்க்க முனைந்த ஆட்சி மொழி (சட்ட)க் கமிஷன், பல சட்டச் சொற்களுக்கு இந்தி மொழிச் சொல் கிடைக்காமல் திண்டாடுகிறதாம்.

இத்தகவலை சட்ட அமைச்சர் திரு, கோவிந்தமேனன் தெரிவித்கிருர்.

'ஆங்கிலத்தைவிட மும்மடங்கு சொல்வளம் கொண்டது இந்தி' என்று வெற்று வேட்டுப் போட்டுக்கொண்டிருக்கும் 'மது லிமாயி'கள், இதற்கு என்ன பதில் சொல்லப் போகிருர்கள்?

மெட்டல் பாக்ஸ் கம்பெனி கதவடைப்பு

எதிர்த்து 800 தொழிலாளர் ஊர்வலம்

சென்னை, செப். 9—

மெட்டல் பாக்ஸ் கம்பெனி நிர்வாகத்தினர், 8—9—37, 6-மணிக்கு சட்டவிரோதமான முறையில் தொழிற் சங்கத்திற்கு யாதொரு முன்னறிவிப்பும் இல்லாமல் கதவடைப்புச் செய்து இருக்கிருர்கள்.

இதை எதிர்த்து 800 தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தித் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டனர்.

சென்னைத் தொழிலகத்தில் வடவர் அட்டூழியம்

தமிழ்த் தொழிலாளி தாக்கப்பட்ட கொடுமை

சென்னை, செப். 10—

புதுவண்ணை சூரியநாராயண செட்டித் தெருவிலிருக்கும் 'வெங்கடேசுவரா பிளவர் மில்'லில் ஏறக்குறைய ஆயிரம் பேர் வேலை செய்கின்றனர். அவர்களில் நான்கு பேர்தான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்; அவர்களும் மிகக் குறைந்த சம்பளத்தில் வேலை செய்கின்றனர். மற்றவர்களெல்லாம் வடநாட்டைச் சேர்ந்தவர்கள் (இராஜஸ்தான் வாசிகள்). அவர்கள் இன-மொழி வெறியுடன் நடந்துகொள்கின்றனராம். அங்கு வேலை பார்க்கும் தமிழர்களை அந்த நிறுவனத்தின் நிர்வாகி, 'நீங்களாக வேலையை விட்டு நீங்கிப் போங்கள்' என்று சொல்லிக் கொடுமைப்படுத்துகிருராம். மற்றும், வடநாட்டுக்காரர்களையும் தூண்டிவிட்டுத் துன்புறுத்துவதாகக் கூறப்படுகிறது.

சென்ற 8—9—67 காலை ஆர். பெருமாள் என்னும் ஊழியர் (தமிழர்) மேகா என்பவரால் தாக்கப்பட்டிருக்கிருர். காரணமின்றி வாய்ச்சண்டைக்கு இழுத்து, கழுத்தைப் பிடித்து நெறித்திருக்கிருர்.

அதைக் கண்டு, அருகில் வேலை செய்துகொண்டிருந்த அருணாசலம் எனும் தொழிலாளியும், நாகம்மாள் என்னும் பெண்மணியும் கூக்குரல் கேட்டு ஓடிவந்திருக்கின்றனர்.

தோழர் பெருமாள் மூச்சுத் திணறும் நிலை ஏற்பட்டு கீழே விழுந்ததும் கையைப் புடைத்திருக்கிருன்—மேகா என்னும் வெறியன்.

நிர்வாகியும், மற்றவர்களும் வந்து, நடந்ததை நேரில் கண்டும் தாக்கியவர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையாம்.

இதுபற்றி தோழர் பெருமாள் போலீசில் புகார் செய்திருப்பதுடன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மாதவனுக்கும் முறையிட்டுக் கடிதம் எழுதியிருப்பதாக அறிவிக்கிருர்.

பதிவேடு

"இந்தியாவுக்குப் பிற நாடுகள் தந்த கடன் தொகைகளில் உபயோகிக்கப்படாத அளவு 1967 எப்ரல் 1-ந் தேதி நிலவரப்படி, ரூ. 1269.56 கோடியாகும்."

'நவ ஹிந்து' : 28—8—67

★

"உத்தரப் பிரதேசத்தின் ஒரு பகுதியில் மட்டும் கருத்தடை செய்யப்பட்டிருப்பவர்களில் 67 சதவிகிதத்தினர், விதவைகள் அல்லது திருமணமாகாதவர்கள் !"

—'அமிர்தபசார் பத்திரிகா'

★

"'இங்கிலாந்து நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்' என, இல்லாத பதவியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பவர்—பொலிவியா நாட்டின் தலைவர் !"

—அப்சர்வர்'

★

"நிர்வாகக் கொள்கைகளில் தவறென்றால் திருத்திக் கொள்ளலாம்; ஆனால் கல்வித் துறைத் தவறுகள் அப்படி அல்ல !"

—எம். சி. சாக்ளா

★

"பத்திரிகைகளில் வருவதைத் தவிர, 'மற்ற எல்லா வியட்நாம் செய்திகளும் சரியானவை' என்று அமெரிக்க அதிபர் ஜான்சன் தனது நண்பர்களிடம் கூறுகிறாராம் !"

—'நியூஸ் வீக்'

★

"சீனர்களின் துரதிருஷ்டம்—அமெரிக்காவுக்கென பீகிங்கில் ஒரு தூதுவரகம் இல்லை."

—'வீக் எண்ட ரெவியூ'

★

"'மண்டல்' முதலமைச்சராக வருவது பற்றி ஆட்சேபணை இல்லை; வந்தால், திரும்பவும் முதலமைச்சராக வருவதற்காக ஆறு மாதத்தில் பதவியை இராஜினமாச் செய்து எதிர்க் கட்சியில் சேர்ந்து விடுவாரே என்பதுதான் !"

(குறிப்பு : 'மண்டல்' சட்ட மன்ற உறுப்பினரல்லர் என்பதால், முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் ஆறு மாதத்தில் அவர் தேர்தலைச் சந்திக்க வேண்டும்.)

—'லிங்க்'

கல்வித் துறையில் ஆங்கிலத்தின் பங்கு !

ஆராய சென்னையில் அனைத்திந்திய மாநாடு

சென்னை, செப். 10—

கல்வித் துறையில் ஆங்கிலத்தின் இடம் என்ன என்பதுபற்றி ஆராய சென்னையில் நவம்பர் 4, 5 ஆகிய நாட்களில் ஒரு மாநாடு நடைபெறும்.

இம்மாநாட்டிற்கான ஆயத்தக் குழு சர். ஏ. இராமசாமி (முதலியார்) தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்திந்தியாவிலிருந்தும் கல்வித் துறைப் பெருமக்கள் பலரும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சர். ஏ. இராமசாமி அவர்கள் தலைமையில் கூடிய நகரப் பெருமக்கள் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பேராசிரியர் எம். இரத்தினசாமி, ரிசர்வ் பாங்கியின் முன்னாள் ஆளுநர் எச். வி. ஆர். ஐயங்கார், வெங்கடேசுவரா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு. எஸ். கோவிந்தராசலு, கே. பாலசுப்பிரமணிய (ஐயர்) எம்.எல்.சி., அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் எஸ். ஜி. மணவாளராமாநுசம், இந்திய மருத்துவக் கழக சென்னைக் கிளையின் தலைவர் ஆர். ஜி. கிருஷ்ணன், டி. ஐ. நிறுவன நிர்வாக இயக்குநர் ஏ. எம். எம். அருணாசலம், தாவர இயல் பேராசிரியர் டி. எஸ். சதாசிவம், கன்னட மொழிப் பேராசிரியர் மாரியப்ப பட், கிறித்துவக் கல்லூரி முதல்வர் சந்திரன் தேவநேசன், மேரி அரசிக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஐராவதி அம்மையார், பச்சையப்பன் கல்லூரி முன்னாள் முதல்வர் சி. டி. இராசேசுவரன், பொருளாதாரப் பேராசிரியர் வேதகிரி சண்முக சுந்தரம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

'இந்தியைக் கற்கவேண்டிய அவசியம் நமக்கில்லை'

'தாய்மொழி---ஆங்கிலம் தமிழருக்குப் போதும்'

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

கோவை, செப். 6—

"இந்தியைத் தொடர்பு மொழியாகக் கருதி அதைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இங்கே யாருக்கும் இல்லை. சாதாரண மக்கள் அந்த மொழியைக் கற்றுத் தீரவேண்டிய நிலையில் இல்லை. இங்குள்ள கடைக்காரர்களும், கூடை வியாபாரிகளும் அன்றாடம் இந்தி பேசும் பகுதிகளிலா வியாபாரத் தொடர்பு கொள்கின்றனர் ?

"மாநிலங்களுக்கும்—மத்திய அரசுக்குமிடையே தொடர்புகொள்ள ஆங்கில மொழியே போதுமானது. யாரேனும் இந்தி பேசும் பகுதிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புவார்களானால், அவர்கள் இந்தியைக் கற்றுக்கொள்ளலாம்; அதற்கான வசதியைச் செய்துகொடுக்க அரசு தயாராயிருக்கிறது"

என்று, தமிழகக் கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியன், இங்கு பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் கல்லூரி மகளிர் உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றின் நிறுவன நாள் விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தமிழ் நாட்டில் மூன்றும் வகுப்பிலிருந்தே பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கப்படும். தாய்மொழியான தமிழையும் அனைத்துலக மொழியான ஆங்கிலத்தையும் நன்றாகக் கற்றுக் கொண்டாலே தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்குப் போதும்.

"பத்தாவது படித்துத் தேறுபவர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல திறமை பெற்றவர்களாக இருக்கச் செய்வதே தமிழக அரசின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை ஈடேற்றும் வகையில், ஆசிரியர்கள் தங்கள் பாடத் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும்.

"ஆங்கிலத்தை அகற்றக்கூடிய அளவுக்குத் தமிழ் மொழி வளர்ச்சி பெற்றுவிட்ட பிறகும் கூட ஆங்கிலத்தை நாம் கற்பது பயனளிக்கக்கூடியதேயாகும்.

"அறிவியல் துறையிலும், தொழில் நுணுக்கத் துறையிலும் புதிய புதிய கருத்துக்களையெல்லாம் அறிந்துகொள்ள ஆங்கில அறிவு தேவை.

குறள் வழங்கிய சமுதாயத்தின் நிலை !

"குவளயத்துக்கே குறளை வழங்கிய தமிழர் சமுதாயம், குறள் நெறிப்படி வாழ்கிறதா என்றால், இல்லை !

'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்று சொல்லியும் இந்தச் சமுதாயம் சாதிப் பிடிப்பிலிருந்து இன்னும் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. அது மட்டுமல்ல: 'சாதி இருந்தால் என்ன ?' என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள் !

"எனவே, திருவள்ளுவர் விழா நடத்தும் நேரத்தில், வள்ளுவர் சொன்ன கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வர உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும்.

"அதற்கு மாணவப் பருவத்தில் உள்ள உங்களிடத்திலே தமிழகத்தின் ஒளிமிகுந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டிக் கேட்டுக் கொள்வதுதான் எங்கள் கடமை."

---அறிஞர் அண்ணா

(அரசி மேரி கல்லூரி வள்ளுவர் விழாவில்)

இந்தியைத் திணிக்க உரிமையில்லை !

"தமிழ் நாட்டில் இந்தியைத் திணிக்கும்படிச் சொல்ல வேறு எந்த மாநிலத்துக்கும் உரிமையில்லை.

"இங்கே இந்தியைப் புகுத்த காந்தியாராலும் நேருவாலுமே முடியவில்லை என்றால், மொரார்ஜி தேசாயாலும் ஜெகஜீவன்ராமாலுமா அதை செய்துவிட முடியும் ?

"மத்திய அரசு மொழிப் பிரச்சினையில் நாட்டைச் சிதைக்க முயன்றால் அது இந்தியாவுக்குக் கெட்ட காலமே ஆகும்"

என்று, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் இங்கு நடந்த கல்லூரி விழாவில் பேசுகையில் எச்சரிக்கை செய்தார்.

அவர் மேலும் பேசுகையில், இந்தி நூல்களை அச்சிடுவதற்காக ஏராளமான பணத்தைச் செலவிடுவது வீண் வேலை என்பதை விளக்கினார்.

"இந்தி நூல்களை அச்சிட்டுவிட்டால் மட்டும் போதுமா ? அவற்றை யார் படிக்கப் போகிறார்கள் ? நூல் நிலையங்களில் வெறும் காட்சிப் பொருளாகத்தான் அவை இருக்கப் போகின்றன" என்றார்.

தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங்கூட ஓரளவு தமிழ் கற்றுக் கொண்டிருப்பதாக அமைச்சர் கூறினார்.

இவ்வாண்டில் 200 பஸ் தடங்கள்

அரசுடைமையாகும்--அமைச்சர் தகவல்

திருச்சி, செப். 10—

"நடப்பு நிதியாண்டு முடிவிற்குள் (1968 மார்ச் 31-க்குள்) 75 மைலுக்கு மேற்பட்ட பஸ் தடங்களை அரசு மேற்கொள்ளும்"

என்று, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

செப். 12 காலை : தஞ்சாவூர் ; மாலை 4-30 மணி : திருச்சி ; 5 மணி : திருச்சி-தில்லைநகர் சமுதாயக் கூடத் திறப்பு விழா ; இரவு 7-30 மணி : தஞ்சாவூர்-பொதுக் கூட்டம்.

அமைச்சர்

மா. முத்துச்சாமி

சுற்றுப்பயணம்

செப். 14 காலை 4-10 மணி : சேலம் ; 9 மணி : பாப்பாரப் பட்டி, ஆட்டயாம்பட்டி, ஆலச் சம்பாளையம் நிகழ்ச்சிகள்.

15 காலை 9-30 மணி : இராசிபுரம் நிகழ்ச்சிகள்.

16 காலை 9-30 மணி : நாமக்கல்—கல்லூரிக் குழுக் கூட்டம் ; மாலை 4 மணி : சேலம் ; 5 மணி : தேக்கு—ஓடு—மூங்கில் வணிகர்கள் சங்க வெள்ளி விழா ; இரவு 7 மணி : சேலம்—பொது வரவேற்பு.

17 காலை 9 மணி : திருச்சி—பெரியார் பிறந்த நாள் விழா ; இரவு 7 மணி : தேனி — குடிநீர்த் தொட்டி திறப்புவிழா.

18 மாலை 6 மணி : வானூர்—தெற்குணம் ஊராட்சி ஒன்றியப் பள்ளித் திறப்பு விழா.

ந. தருமலிங்கம்

எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

செப். 12, 13 : முத்துப்பேட்டை தொகுதி அலுவல் ; 14 : முத்துப் பேட்டை, மூலக்கரை ; 15 : சென்னை ; 16 : தகட்டூர் ; 17 : திருவாரூர் ; 18 : பட்டுக்கோட்டை ; 19 : நடுக்காவேரி ; 20 முதல் 29 வரை : பொறுக்குக் குழு கூட்டம் ; 30 : சென்னை.

கோவை மு. இராமநாதன்

சுற்றுப்பயணம்

செப். 12 : திருவரங்கம் ; 13 : சிவகங்கை ; 14 : முகவை—இளையான்குடி ; 15, 16 : குடந்தை ; 17 : தஞ்சை, வல்லம் ; 18 : கோவை 3-வது வட்டம் ; 19 : சோவை 28-வது வட்டம் ; 20 : மதுரை—திருப்பரங்குன்றம் ; 21 : மதுரை—மேலூர் ; 22 : மதுரை—திருபுவனம் ; 23 : மதுரை நகரம் ; 24 : தாராபுரம் : 25, 26 : கோவை ; அக்டோபர் 4 : மதுரை—நத்தம் ; 5 : சிறுகுடி ; 6, 7, 8, 9 : மதுரை நகரம்.

குன்னத்தூர் க. அன்பரசு

சுற்றுப்பயணம்

செப். 10 : பொள்ளாச்சி ; 15 : கரூர் ; 16 : திருப்பூர் ; 17 : திருச்செங்கோடு ; 18 : தாராபுரம் ; 19 : ஈரோடு ; 20 : பழனி 14-வது வட்டம் ; 21, 22, 23, 24 : பழனி வட்டம் ; 27 : ஈரோடு.

குழுக் கூட்டம்

அந்தியூர் தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் இ. எம். நடராசன் பி ஏ.பி.எல்., எம்.எல்.ஏ. தலைமையில், 13—9—67 காலை 8 மணிக்கு தேர் வீதியிலுள்ள கழகப் பணிமனையில் நடைபெறும்.

பட்டி மன்றம்

சென்னை-எஸ்பிளனேடு, ஒய்.எம்.சி.ஏ. பட்டி மன்றச் சார்பில் 12—9—67 மாலை 6-15 மணிக்கு க. அன்பழகன் எம்.ஏ, எம்.பி. தலைமையில், 'தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள்' குறித்து எஸ். கே. சம்பந்தம் பி.ஏ., எம்.பி., உரையாற்றுவார்.

திருமணம்

சட்டமன்ற உறுப்பினர் தோழர் எல். கணேசன் பி.ஏ.பி.எல். அவர்கட்கும்—தோழியா கமலாவிற்கும் 12—9—67 காலை 10-மணியளவில் தஞ்சை கரந்தை தமிழ்ச் சங்கத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும்—அமைச்சர் மாதவன் முன்னிலையிலும் திருமணம் நடைபெறும்.

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

12--9--67

ஆரப்பாளையம்

எம்.ஜி ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு மந்தைத் திடலில் ; தலைவர்: ஆ. குருசாமி ; பேசுவோர் : ஆ. திராவிடமணி, கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., சி. கோவிந்தராசன் எம். எல். ஏ,, பி. எஸ். மணியம் பி.ஏ.பி.எல்., கே. எஸ். சந்தானம் எம்.சி., இரா. சு. செல்லம்.

13--9--67

வீரசோழன்

தி. மு. க. சார்பில் காலை 10 மணிக்கு முத்துஊரணி எதிரில் ; தலைவர்: கே. கந்தசாமி; பேசுவோர் : அமைச்சர் சாதிக் பாட்சா, இர. சின்னச்சாமி பி.எஸ்சி., மாங்குடி மதியழகன், இரா. கிருட்டினன், பிச்சைமணி, வி எம். ஏ. கமால்முகமது, நெயினு முகமது.

புத்தூர் (ஆந்திரம்)

தி.மு.க. சார்பில் இரவு 8 மணிக்கு தருமராசா கோயில் அருகில்; தலைவர்: எம். கணபதி; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, கே. ஜி. முருகேசன், எம். சுப்பிரமணியம், வி. நரசிம்மலு, கே. ஆர். எர்ரய்யா, சி. ஆர். சண்முகம், என். வீராசாமி.

[மாலை 5 மணிக்கு ஏ. கே. முனுசாமி தலைமையில் சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.]

'சாதனை என்ன?' என்று கேட்டோருக்கு தஞ்சைத் தரணி தருகிறது பதில்

கோவை, செப். 8—

இவ்வாண்டு அக்டோபர் 10-ம் நாள்முதல் டிசம்பர் இறுதிக்குள்ளாக, தஞ்சை மாவட்டத்திலிருந்து நான்கு இலட்சம் டன் நெல் கொள்முதலாகி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப்படும்.

தஞ்சையில் இந்த மூன்று மாத காலத்தில் கொள்முதலாகிற நெல்லை வெளி மாவட்டங்களுக்கு ஏற்றிச் செல்ல நாள் ஒன்றுக்கு 800 லாரிகளும், 200 இரயில் வாகின்களும் தேவைப்படும்.

தேவையான லாரிகளை அமர்த்திக்கொள்ள மாவட்டக் கலெக்டர்கட்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

கொள்முதலைச் சீராக நடத்தவும், கொள்முதலான நெல்லை வெளி மாவட்டங்களுக்கு விரைந்து எடுத்துச் செல்லும் பணிகளைக் கவனிக்கத் தனி அதிகாரி நியமிக்கப்படவிருக்கிறார்.

இத்தகவலை, உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இங்கு இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13,) [illegible]